# உயர்வாசற்குன்று முருகன் கோவில்

200A Archway road, London N6 5BA
தொலைபேசி இல:020 8348 9835 தொலைநகல் :020 8482 6508

---

பிரித்தானியா இந்து (சைவ) அறங்காவற் குழுவின் முன்னை நாள் தலைவரும், உயர்வாசற்குன்று முருகன் கோவில் ஸ்தாபகருமான அமரர் உயர்திரு சபாபதிப்பிள்ளை ஐயா அவர்களின் ஞாபகார்த்தமாக திருவாசக விழா - சமயப் போட்டி

காலம்: 17.12.2016 சனிக்கிழமை காலை 9.30 மணி

## இடம்: ஆலய கல்யாண மண்டபம் உயர்வாசற்குன்று முருகன் கோவில்

200A Archway Road, London N6 5BA

<u>பிரிவு: அ. 5 வயதிற்கு உட்பட்டோர்</u>

விரும்பிய தேவாரம் ஒன்று

<u>பிரிவு ஆ. 5 வயதிற்கு மேல் 7 வயதிற்கு உட்பட்டோர்</u>

விரும்பிய தேவாரம் ஒன்றும் மற்றும் புராணம் ஒன்றும்

<u>பிரிவு இ. 7 வயதிற்கு மேல் 9 வயதிற்கு உட்பட்டோர்</u>

<u>தேவாரம்</u>

ராகம்: காம்போதி தாளம்: ஆதி

வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதம்சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா எனநின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே.

## திருவாசகம்

ராகம்: மோகனம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவ பதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே

## பெரியபுராணம்

ராகம்: மத்தியமாவதி

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப்
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந் தழுக
சீத வளவயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

# பிரிவு ஈ 9 வயதிற்கு மேல் 11 வயதிற்கு உட்பட்டோர்

## தேவாரம்

ராகம்: நவரோஸ் தாளம்; ஆதி

சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்குலு முன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

## திருவாசகம்

ராகம்: மோகனம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கே
னாண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

## திருப்புகழ்

ராகம்: மோகனம் தாளம்: சந்த

காரணமதாக வந்து புவி மீதே
காலன் அனுகாதிசைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞான நடமே புரிந்து வருவாயே
ஆரமுதமான தந்தி மணவாளா
ஆறுமுகம் ஆறிரண்டு விழியோனே
சூரர் கிளை மாள வென்ற கதிரவேல
சோலை மலை மேவிநின்ற பெருமாளே

பிரிவு உ 11 வயதிற்கு மேல் 15 வயதிற்கு உட்பட்டோர்

## பஞ்சபுராணம்

## தேவாரம்

ராகம்: கம்பீரநாட்டை தாளம்: ஆதி

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனல் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடும்
கணபதி யீச்சரம் காமுறவே.

## திருவாசகம்

ராகம்:

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துஉன்
விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான்தவிர்ந்து உன்னைப் போற்றிசயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.

பிரிவு உ <u>11 வயதிற்கு மேல் 15 வயதிற்கு உட்பட்டோர்</u>

## திருவிசைப்பா

<u>ராகம்: ஆனந்தபைரவி</u>

தனத நற் றோழா சங்கரா சூலபாணியே
தாணுவே சிவனே
கனக நற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடைய தோர் கரும்பே
அனகனே குமர விநாயக ஜனக
அம்பலத்து அமரர் சேகரனே
உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்ட னேன் நுகருமா நுகரே.

## திருப்பல்லாண்டு

ராகம்:

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

<u>ராகம்: மத்தியமாவதி</u>

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க/என்றார் .

பிரிவு உ 11 வயதிற்கு மேல் 15 வயதிற்கு உட்பட்டோர்(தொடர்ச்சி)

## திருப்புகழ்

ராகம்: சுத்தசாவேரி தாளம்: ஆதி

அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி அவர்மேலாய்
இகரமுமாகி எவைகளுமாகி இனிமையுமாகி வருவோனே
இருநீலமீதில் எளியனும்வாழ எனதுமுன்ஓடி வரவேனும்
மகபதியாகி மருவும் வலாரி மகிழ்களிகூறும் வடிவோனே
வனமுறை வேடன் அருளியபூசை மகிழ் கதிர்காமம் உடையோனே
செககன சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசை மேவு பெருமாளே

பிரிவு ஊ 15 வயதிற்கு மேல் 18 வயதிற்கு உட்பட்டோர்

## தேவாரம்

ராகம்: அரிகாம்போதி

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள் அகன்றாள்
அகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

## திருவாசகம்

ராகம்: ஆரபி ராகம்: ஆதி

ஆடுகின்றிலை கூத்து உடையான் கழற்கு
அன்பு இலை என்பு உருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதம் மலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை
துணை இலி பிணம் நெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வது ஒன்று அறியேனே.

## திருப்பல்லாண்டு

ராகம்:

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அனயுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

ராகம்: மத்தியமாவதி

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

பிரிவு ஊ 15 வயதிற்கு மேல் 18 வயதிற்கு உட்பட்டோர்(தொடர்சி)

## திருப்புகழ்

ராகம்: தேஷ் தாளம்: ஆதி

வசனமிக வேற்றி மறவாத
மனது துயர் ஆற்றில் உழலாதே
இசை பயில் சடாட்சரம் அதாலே
இகபர சௌபாக்கியம் அருள்வாயே
பசுபதி சிவாக்யம் உணர்வோனே
பழநி மலை வீற்று அருளும் வேலா
அசுரர் கிளைவாட்டி மிக வாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே.

## பிரிவு எ 18 வயதிற்கு மேல்

முதல் 10 திருவெம்பாவை பாடல்கள்

# பரிசளிப்பு விழா ஞாயிறுக்கிழமை 18/12/2016 பிற்பகல் 6 மணி